# கிறிஸ்தவ நாகரிகம் புதிய பாடத்திட்டம்

## கிறிஸ்தவ நாகரிகத்தில் தாககத்தை ஏற்படுத்திய நாகரிகங்கள்

அருட்தந்தை யா. றமேஸ் அ.ம.தி

கிறிஸ்தவ நாகரிகமென்பது கிறிஸ்துவின் வாழ்ககையிலும், போதனையிலும் மிளிர்ந்த நிதி, உண்மை, அன்பு, சமத்துவம், சகோதரத்துவம், தாழ்ச்சி, எளிமை, இரக்கம், மன்னிப்பு, விட்டுக்கொடுப்பு போன்ற பண்புகளை தமதாக்கி வாழ்வதாகும். இதன் உருவாக்கத்தில் யூதநாகரிகம், கிரேக்க நாகரிகம் மற்றும் உரோமை நாகரிகம் என்பன நேரடியாக செல்வாக்குச் செலுத்தியுள்ளன. அதேவேளையில் யூதநாகரிகம் நேரடியாக மொசப்பத்தேமிய மற்றும் எகிப்திய நாகரிகங்களின் தாக்கத்திற்கு உட்பட்டவையாகும். யூதநாகரிகம் சுமேரிய, கானானேய, அசீரிய, பபிலோனிய பண்பாடுகளின் சிறப்பு அம்சங்களுடன் வளாச்சி பெற்ற ஓர் நாகரியமாகும். சவுல், தாவீது, சாலமோன் போன்ற இஸ்ராயேல் முடிமன்னர்களின் ஆட்சிக்காலத்திலே பாலஸ்தீனப் பேரரசில் யூதநாகரிகம் உருவாக்கம் பெற்றுள்ளது. யூதநாகரிகத்தின் நெறிமுறைகளுக்கு உட்பட்டவராயிருந்தாலும் இயேசு அதன் நெறிமுறைகளை புதிய கண்ணோட்டத்தில் விளக்கி வாழ்ந்தும் காட்டியுள்ளார். யூதநாகரிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய கிரேக்க, உரோமை நாகரிகத்தின் பண்புகளையும் வாழக்கையில் கைக்கொண்டு மக்களும் வாழக் கற்றுக்கொடுத்தார். இவையே கிறிஸ்தவ நாகரிகத்தின் அடிப்படையாகும்.

### யூத நாகரிகம்

விவிலிய அடிப்படையில் நோக்கும்போது இஸ்ராயேல் மக்களின் வரலாறானது கி.மு 1800-1700 காலப்பகுதியில் மொசப்பத்தேமியாவில் ஆபிரகாமின் அழைப்புடன் ஆரம்பமாகியது. ஆபிரகாம் மொசப்தேமியாக் கலாச்சாரத்தில் பிறந்து வளர்ந்தவராவார். மந்தை மேய்ப்பவரான ஆபிரகாம் யூப்பிரடீஸ் - தைக்கிறீஸ் ஆற்றுவழியாக பயணம் செய்து யோர்தானில் குடியமர்ந்து இஸ்ராயேல் இனம் உருவாகக் காரணமானார். யோசேப்பினுடைய காலத்திலே பஞ்சத்தினால் இடம்பெயர்ந்த இஸ்ராயேல் மக்கள் எகிப்திற்கு சென்று அங்கே பலவாண்டுகள் குடியமர்ந்தனர். ஏறத்தாழ 450 ஆண்டுகள் எகிப்தில் வாழ்ந்த இஸ்ராயேல் மக்கள் எகிப்திய நாகரிகத்தின் தாக்கத்திற்கு ஆளாகினர். மோசே மற்றும் ஆரோன் தலைமையில் எகிப்தை விட்டு வெளியேறிய இஸ்ராயேல் மக்கள் யோசுவா தலைமையில் கானானை அடைந்து அங்கு கி.மு 1020 இல் சவுல் அரசனின் கீழ் இஸ்ராயேல் அரசை நிறுவினர்.

காலப்போக்கில் இஸ்ராயேல் வட அரசு, தென் அரசு என இரண்டாகப் பிரிய கி.மு 722 இல் ஆசீரியர் வட அரசை தமது ஆட்சியின் கீழ் அடிமையாக்கினர். இதனால் ஆசீரிய நாகரிகத்தின் தாக்கமும் இஸ்ராயேல் நாகரிகத்தில் கலந்து கொண்டது.. கி.மு 604-586 இல் பபிலோனியர் யூதேயாவையும், பாலஸ்தீனாவையும் கைப்பற்றி இஸ்ராயேல் மக்களை பபிலோனியாவிற்கு நாடு கடத்தினர். இதனால் இஸ்ராயேலர் பபிலோனிய நாகிரிகத்தின் தாக்கத்திற்கும் ஆளாகினர். பின்னர் பாரசீகரின் ஆட்சியின் ஆட்சியின் கீழ் 200 ஆண்டுகள் வாழ்ந்த இஸ்ராயேல் மக்களின் வாழ்வில் பாரசீக நாகரிகமும் சேர்ந்து கொண்டது. கி.மு 333- கி.மு 63 வரை மகா அலகஸசாண்டரின் கிரேக்க அட்சியினால் இஸ்ராயேலர் கிரேக்க நாகரிகத்தின் கணிசமான தாக்கத்திற்கு உள்ளாகினர். உரோமையரின் அட்சியின் கிழ் உரோமை நாகரிகமும் இஸ்ராயேலரிடம் செல்வாக்கு செலுத்தியது. யூத நாகரிகத்தின் தோற்றத்தில் மொசப்பத்தேமிய நாகரிகம் கணிசமான செல்வாக்கு செலுத்திய அதேவேளையில் எகிப்து, ஆசீரிய, பபிலோனிய, பாரசீக, கிரேக்க, உரோமை நாகரிகங்களும் செல்வாக்கு செலுத்தியுள்ளன. பிற்பட்ட காலத்தில் கிரேக்க நாகரிகத்தின் தாக்கம் இஸ்ராயேலரிடத்தில் மிகவும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. இவ்வாறு வரலாற்றில் பல நாகரிகங்களின் கூட்டு நாகரிகமாக யூதநாகரிகம் நோக்கப்படுகிறது.

யூத நாகரிகத்தின் பண்புகளான ஒரே கடவுள் நம்பிக்கை, உடன்படிக்கை வாழ்வு, எபிரேய விவிலிய நூல்கள், யூத சமய சடங்குகள், யூத விழாக்கள், பலிகள், ஆலய வழிபாடுகள், யூதச் சட்டங்கள் என்பன் கிறிஸ்தவ நாகரிகத்தில பெருமளவில் தாக்கம் செலுத்தியுள்ளன. இயேசு நசரேத்தூரில் ஒரு யூதக் குடும்பததில் பிறந்து, யூதக் கலாச்சராத்தில் வளர்ந்து, யூத வரலாற்றைக் யூதப்பள்ளியிலேயே கற்றுத்தேர்ந்து, அச்சூழமைவில் சிந்திக்கவும், வாழவும் பயிற்றப்பட்டார். ஞானத்திலும் அறிவிலும் வளர்ந்து, தாய் மரியா கொண்டிருந்த இறை

நம்பிக்கையிலிருந்து இறைவன் இரக்கமும், பரிவும், நேர்மையும், நீதியும் உள்ளவரென நம்பினார். இறையாட்சியை அனைவருக்கும் போதித்து, அதற்காகவே வாழ்ந்து, மரணித்து, மீண்டும் உயிர்பெற்றார். கிறிஸதவ நாகரிகம் தோன்றுவதற்கு இயேசுவின் வாழ்வும், போதனைகளும், படிப்பினைகளும், செயற்பாடுகளுமே அடிப்படையாக அமைந்துள்ளன. இதனால் கிறிஸ்தவ நாகரிகத்தினுள் யூத நாகரிகத்தின் கூறுகளை இலகுவில் இனங்காண முடியும்.

**கிரேக்க நாகரிகம்**

மனித சமூகத்தின் மேம்பாட்டிற்கு பெரும் பங்களிப்புச் செய்த பல நாகரிகங்களில் கிரேக்க நாகரிகம் முதன்மையானதும் அத்துடன் அறிவியல் வளர்ச்சிக்கும் பல விஞ்ஞான கண்டுபிடிப்புகளுக்கும் வித்திட்டதும் ஆகும். கிரேக்கர்கள் விவசாயத்தையும் கடல்வழி வர்த்தகத்தையும் முக்கிய தொழிலாக கொண்டிருந்தனர். அரசியல், மெய்யியல், தர்க்கம், பௌதீகம், புவியியல், வாணிபம், கணிதம், இலக்கியம், கலை, மருத்துவம், விளையாட்டு போன்ற பல துறைகளுக்கும் பங்களிப்புச் செய்த நாகரிகம் ஆகும். தனி மனித ஆற்றலை வளர்ப்பதிலும் உடற்பயிற்சி, விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றில் திறமையாக செயற்படுவோரை கௌரவிப்பதிலும் இராணுவ பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதிலும் முன்னிலை வகித்தது. பகுத்தறிவின் அடிப்படையில் விடயங்களை புரிந்து முடிவுகளை எடுக்கும் முறைமை இவர்களின் பெரும் பங்காகும். சோக்கிறட்டீஸ், பிளேற்றோ, அரிஸ்ரோட்டில் போன்றோர் சிறந்த சிந்தனையாளர்கள் ஆவர். திருவிவிலியத்திலும் கிறிஸ்தவ வாழ்விலும் கிரேக்கத்தின் ஆதிக்கத்தினை அளவிடமுடியும். புதிய ஏற்பாட்டில் குறிப்பாக யோவான் மற்றும் பவுலின் படிப்பினைகளின் கிரேக்க மெய்யியலின் தாக்கத்தினையும், கிறிஸ்தவ வாழ்வினுள் குறிப்பாக அறிவியல், கலை, மற்றும் நாடக துறையிலும், கட்டடக்கலையிலும் கிரேக்க நாகரிகத்தின் தாக்கம் வெளிப்படுகிறது.

**உரோமை நாகரிகம்**

தைபர் ஆற்றங்கரையோரத்தில் காணப்படும் உரோமை நகர் இலத்தின் மக்களின் வதிவிடமாகவும், வாணிப மையமாகவும் விளங்கியது. உரோமிற்கு அடித்தளமிட்டவர்களான ரோமுலஸ் மற்றும் அவரது முன்னோர் கிரேக்க நாட்டிலிருந்து போர் காரணமாக குடியேறிவாகளே ஆவர். மக்களிடம் காணப்பட்ட ஆதிக்கத் தன்மையும், மற்றைய மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக்களும், அடைந்த வெற்றிகளுமே உரோம் பரந்த பேரரசாக மாறக் கரணமாகும். உரோமைப் பேரரசின் காலத்திலே ஐரோப்பா முழுவதிலும் ஒற்றுமை நிலவியது. கி.பி 4ம் நூற்றாண்டில் உரோமைப் பேரரசு விழ்ச்சியடைந்தமைக்கான காரணம் நாகரிகமடையாக மக்களின் படையெடுப்பாகும். உரோமர் சமூக அடிப்படையில் பற்றீசியன், பிளேப்பியன்ஸ் எனும் இரண்டு பிரிவுகளைக் கொண்டவர்கள். 4ம் நூற்றாண்டில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவே அவர்களது சமூக அந்தஸ்தும் உயர்ந்தது. முக்கோண வடிவமைப்பைக் கொண்ட படிமுறை அதிகார அமைப்பு நிலை உரோமை அரசியல் சமூக மட்டத்தில் காணப்பட்டது. இந்நிலை திருச்சபையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. திருச்சபையில் குருக்கள் பொதுநிலையினர் எனும் தெளிவான வேறுபாடு வளர்ந்தது. திருச்சபையின் அதிகார அமைப்பு முக்கோண அமைப்பைக் கொண்டதாக மாறியது. திருத்தந்தை, போராயர்கள், ஆயர்கள், குருக்கள், திருத்தொண்டர்கள் துறவியர் என வரிசைப்படுத்தப்பட்டனர். பொதுநிலையினர் அடிமட்டத்திலேயே காணப்பட்டனர். திருச்சபையின் தீர்மானம் எடுக்கும் பொறுப்பும் அதை செயற்படுத்தும் அதிகாரமும் குருக்களிடமே காணப்பட்டது. பொதுமக்களின் பங்கும், செயற்பாடும் முற்றாகவே அருகியிருந்தது. இந்த அமைப்புமுறை 2ம் வத்திக்கான சங்கம் வரை நீடித்தது.

இரண்டாம் வத்திக்கான சங்கத்தின் தீர்மானங்களின் அடிப்டையில் இன்று கிறிஸ்வ வாழ்வை நோக்கும்போது மனித நேயத்தை முன்னிறுத்திய இயேசுவின் போதனைகள் சிறப்பிடம் பெறுகின்றன. சட்டத்துக்குள் முடங்கிக் கிடந்த யூதநாகரிகத்தில் மனிதநேயத்தை முதன்மைப்படுதிய இயேசுவைப் போல, உரோமைப் படிமுறை அமைப்புக்குள் சிக்கித்தவித்த திருச்சபைக்கு சமத்துவ சமுதாயத்தின் தேவையை உணரவைத்தது இரண்டாம் வத்திக்கான் சங்கம். எந்த நாட்டில், எந்த மக்கள் மத்தியில் கிறிஸ்தவம் வாழப்படுகிறதோ அந்த நாட்டு மக்களின் வாழ்வியலை தழுவியதாக கிறிஸ்தவ வாழ்வு அமையவேண்டும் என்ற நிலை திருச்சபையின் ஒற்றுமையையும் சமத்துவத்தையும் எடுத்துக்காட்டுகிது. காலத்தின் தேவைக்கேற்ப எமது ஆன்மீகமும் வாழ்வியலும் அமையும் போதே அவர்கள் வாழ்வு அர்த்தம் பெறுகிறது.